உ

ஓம் நமச்சிவாய

# அருள்மிகு பட்டீசுவரசுவாமி திருக்கோயில்,

## பேரூர், கோவை மாவட்டம்

# ஒப்பந்தப்புள்ளி திறப்பு அறிவிப்பு

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான வெள்ளிக்கிழமை அம்மன் தோப்பு பகுதியில் தர்ப்பண மண்டபம் புதியதாக கட்டுதல் பணிக்கு தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்த டெண்டர்கள் கீழ்க்காணும் நாள் மற்றும் நேரம் ஆகிய விபரங்களுடன் திருக்கோயில் உதவி ஆணையர்/செயல் அலுவலரால் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்த டெண்டர்கள் கீழ்க்காணும் நாள் மற்றும் நேரத்தில் இத்திருக்கோயில் கல்யாண மண்டபத்தில் வைத்து வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்றவர்களின் முன்னிலையிலும், துறை அலுவலர்கள் முன்னிலையிலும் திருக்கோயில் உதவி ஆணையர்/செயல் அலுவலரால் திறந்து பரிசீலிக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒப்பந்த படிவம் பெற்றுக் கொள்வதற்கான நாட்கள் | – | 22.03.2018–ம் தேதி முதல் 03.04.2018 ம் தேதி வரை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். |
| 2. | ஒப்பந்த படிவம் வந்து சேர வேண்டிய கடைசி நாள் / நேரம் | – | 04.04.2018 அன்று பிற்பகல் 2.00 மணிக்குள் |
| 3. | ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள்/நேரம் | – | 04.04.2018 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு |

## நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளிகள் உதவி ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு பட்டீசுவரசுவாமி திருக்கோயில்,பேரூர், பேரூர் வட்டம், கோவை மாவட்டம் என்ற முகவரிக்கு உறையின் மேல் வேலையின் பெயர், ஒப்பந்ததாரர்முகவரி ஆகியவற்றை குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும்.

2. ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டவுடன், ஒப்பந்தப் படிவத்தில் சான்றொப்பமிடப்பட்ட அல்லது இடப்படாத அடித்தல், திருத்தல் இருப்பின் அவைகளின் பட்டியல் உதவி ஆணையர்/செயல் அலுவலரால் தயாரிக்கப்பட்டு சுருக்கொப்பமிடப்பட்டு, ஒப்பந்ததாரருக்கு கொடுக்கப்படும். ஒப்பந்ததாரர் அல்லது அவரின் பிரதிநிதி வரவில்லை எனில் மேற்படி பட்டியல் அவருக்கு அனுப்பி வைக்கப்படும். இதை அவராக கேள்வி ஏதுமின்றி ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

3. ஒப்பந்தப்புள்ளிகள் திருக்கோயில் அலுவலகத்திலிருந்து கொடுக்கப்படும் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் தான் இருக்க வேண்டும். மேற்படி படிவத்தை உரிய தொகை செலுத்தி இதன் இறுதியில் கண்ட நாள் மற்றும் நேரத்தில் அலுவலக நாள் மற்றும் நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளி படிவம் திருக்கோயில் இணையதளம் tnhrce.org மற்றும் perurpatteeswarar.tnhrce.in என்ற முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

4. இந்து சமய அறநிலையத்துறை அல்லது பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி போன்ற ஏதாவது அரசுத்துறையில் உரிய பதிவுப் பெற்ற ஒப்பந்ததாரர்களே ஒப்பந்த டெண்டர்கள் கொடுக்க தகுதி பெற்றவர்கள் ஆவார்கள். அவ்வாறு பதிவு பெற்றமைக்கான உத்தரவின் நகல் ஒப்பந்த டெண்டருடன் இணைக்கப்பட வேண்டும்.

. . . 2 . . .

5. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் டேவணித் தொகையாக இதன் கீழ்க்கண்டிருக்கும் தொகையை வங்கி வரைவோலை அல்லது கேட்பு வரைவோலையாக செலுத்தி அதற்கான இரசீதையும் உரிய அலவலர்களிடம் பெற்று, வருமானவரி மற்றும் விற்பனை வரி சரிபார்த்த சான்றிதழ்களையும் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். ஒப்பந்தத்தில் உறுதி பெற்றவர்களை தவிர மற்றவர்களின் டேவணித் தொகையை காசோலையாக திருப்பித் தரப்படும்.

6. ஒப்பந்ததாரர் செட்டியூலில் கண்ட ஒவ்வொரு இனத்திற்கும் தொகையை (ரேட்) எண்ணாலும், எழுத்தாலும் குறிப்பிட வேண்டும் மற்றும் செட்டியூலில் ஒவ்வொரு இனத்திற்கும் உண்டான கூடுதல் தொகையையும் இறுதியில் அனைத்து இனங்களின் கூடுதல் தொகையையும் குறிப்பிட வேண்டும். தொகைகள் அடித்தல் திருத்தலின்றி எழுதப்பட வேண்டும். அடித்தல், திருத்தல் ஏற்பட்டால் அவைகள் ஒப்பந்ததாரரால் சான்றொப்பம் செய்யப்பட வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தப் படிவத்தில் செட்டியூல், நிபந்தனைகள், வரைபடங்கள் முதலானவற்றில் ஒப்பந்ததாரர் திருத்தமோ அல்லது மாற்றமோ செய்ய கூடாது. ஒப்பந்தப் படிவத்தில் ஒவ்வொரு பக்கமும் ஒப்பந்ததாரரால் கையொப்பமிட்டிருக்க வேண்டும். ஒப்பந்ததாரர் மொத்தமாக தொகையில் இவ்வளவு சதவிகிதம் கூடுதலாகவோ, குறைவாகவோ ஒப்பிட்டுக் கொடுத்தால் அது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

7. ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் முன் வேலையின் தன்மை, இடம், வேலைக்கு தேவையான பொருட்கள் கிடைக்கின்ற இடங்கள், ஒப்பந்தம் பற்றிய முழு விபரங்கள், நிபந்தனைகள், வரைபடங்கள், தொடர்புடைய சட்டவிதிகள் ஆகியவற்றை முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும்.

8. எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் காரணம் கூறாமல் ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ திருக்கோயில் உதவி ஆணையர் / செயல் அலுவலருக்கு உரிமை உண்டு. இந்த அறிவிப்பில் கண்ட நிபந்தனைகளின்படி இல்லாத ஒப்பந்த டெண்டர்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

9. ஒப்பந்தப்புள்ளி ஏற்பு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களின் முடிவான அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும்.

10. தகவல் தெரிந்தவுடன் உதவி ஆணையர் / செயல் அலுவலரால் நிர்ணயிக்கப்படும் தொகையை மேற்படி வேலைக்கான பிணை வைப்புத் தொகையாக ஒப்பந்ததாரர் மேற்படி கோயிலுக்கு ரொக்கமாக அல்லது இதர வடிவங்களில் (இதில் உதவி ஆணையர்/செயல் அலுவலர் முடிவே இறுதியானது) செலுத்த வேண்டும். இதற்கு வட்டி எதுவும் கொடுக்கப்படமாட்டாது. ஒப்பந்ததாரர் செலுத்திய டேவணித்தொகை மேற்படி பிணை வைப்புத் தொகைக்கு ஒரு பகுதியாக ஈடு செய்து கொள்ளப்படும். வேலை முடிக்கப்பட்டு மேலளவை செய்யப்பட்டு மேலதிகாரியின் உத்தரவு பெற்ற பின்னரே செலுத்தப்பட்ட பிணை வைப்புத் தொகை திருப்பித்தரப்படும்.

11. ஒப்பந்தப்புள்ளி இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் முடிவான அங்கீகாரம் கிடைத்து அது பற்றிய தகவல் கிடைத்த மூன்று நாட்களுக்குள் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் ஒப்பந்ததாரரால் ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறு திருக்கோயில் உதவி ஆணையர்/செயல் அலுவலரும், ஒப்பந்ததாரரும் சேர்ந்து ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொண்ட பின்னரே ஒப்பந்தம் முழுமையடைந்ததாகக் கருதப்படும். வேலை செய்யப்பட வேண்டிய உத்தரவை திருக்கோயில் வசம் பெற்று திருக்கோயில் நிர்வாகத்தாரரால் நிர்ணயிக்கப்படும் நாளில் வேலை துவக்கப்பட வேண்டும். அந்த நாளே ஒப்பந்ததாரர் வசம் ஒப்படைக்கப்பட்ட நாளாக கொள்ளப்படும்.

12. ஒப்பந்ததாரர் வேலையை முழுமையாக அல்லது பகுதியாகவோ வேறொரு நபருக்கு உள் ஒப்பந்தத்திற்கு விடக்கூடாது.

13. வேலைக்கு பயன்படுத்தப்படும் பொருட்களின் மாதிரியை முன்கூட்டியே தக்க அதிகாரியிடம் காண்பித்து அதற்கான ஒப்புதல் பெற்ற பின்னரே அவைகளைப் பயன்படுத்த வேண்டும். வேலைக்குப் பயன்படுத்தப்படும் பொருட்களின் தரம், செய்யப்பட்ட வேலையின் தரம் ஆகியவைகள் பற்றிய சம்பந்தப்பட்ட அதிகாரியின் முடிவே இறுதியானதாகும்.

14. இவ்வொப்பந்தம் 1959–ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை சட்டம் பிரிவு 116 (2)–ன்கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளுக்கு ஏனைய சம்பந்தப்பட்ட சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டதாகும். இதன் விபரங்களை அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

15. தமிழ்நாடு டீடெய்ல்டு, ஸ்டேண்டர்டு ஸ்பெசிபிகேசன்ஸ் மற்றும் அதிலுள்ள ஸ்டேண்டர்டு பிரிலிமினெரி ஸ்பெசிபிகேசன்ஸ் ஆகியவைகளை ஒப்பந்ததாரர் தெளிவாக அறிந்து அவைகளுக்கு இணங்க வேலையைச் செய்ய வேண்டும்.

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்ததாரர் வகுப்பு | ஒப்பந்தத் தொகை | பிணை வைப்புத் தொகை | முடிக்க வேண்டிய காலம் | ஒப்பந்தப் படிவம் விலை |
|---|---|---|---|---|---|---|
| 1. | புதியதாக தர்ப்பண மண்டபம் கட்டுதல் | இரண்டாம் வகுப்பு அதற்கு மேல் | ரூ. 27,74,000/– | ரூ. 24,000/– | 10 மாதங்கள் | ரூ. 9,450/– மற்றும் வரிகள் |

திரு. மு.கார்த்திக், பி.எஸ்.சி, பி.எல்.,
தக்கார்/துணை ஆணையர்/செயல் அலுவலர்
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்
மருதமலை

திரு. நா. சரவணன், பி.எஸ்.சி, பி.எல்.,
உதவி ஆணையர்/செயல் அலுவலர்
Website: www.perurpatteeswarar.tnhrce.in
Email : patteeswararperur@tnhrce.com
தொலைபேசி எண் : 0422–2607991

இடம் : பேரூர்
நாள் : 22.03.2018